# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 28.03.2026**

**OS No. : 208/2020**
**Pw : 2**

**Name : திரு.சாகுல் ஹமீது**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது விவசாயம் செய்துவருகிறேன். எங்கள் ஊருக்கும் பிரதிவாதியின் ஊருக்கும் சுமார் 5 – 6 கி.மீ தூரம் இருக்கும். இவ்வழக்கின் வாதி நவாஸ்கானை எனக்கு தெரியும், பிரதிவாதியை எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பமிட்ட ஆவணத்தை முழுமையாக படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தபசில் சொத்தின் விபரம் தற்போது எனக்கு நியாபகமில்லை. செங்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சாட்சி கையொப்பமிட என்னை நவாஸ்கான் அழைத்துசென்றார். பத்திரம் பதிவதற்கு உடன் வாருங்கள், அதற்குரிய கூலி தருகிறேன் என்று நவாஸ்கான் என்னை அழைத்தார் என்றால் சரிதான். அதற்குரிய பணத்தை நான் வாங்கிகொண்டேன் என்றால் சரிதான். நவாஸ்கான் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார், பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள தபசில் சொத்தானது, செங்கோட்டை மெயின் ரோட்டில் உள்ள ஒரு சிறிய வீடு மற்றும் 3 சென்ட் மனை ஆகும். தபசில் சொத்திலிருந்து செங்கோட்டை பேருந்து நிலையம் அரை கி.மீ தூரத்தில் உள்ளது. தபசில் சொத்திலிருந்து செங்கோட்டை நீதிமன்றம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவை 5 நிமிட நடையில் அடைந்துவிடலாம் என்றால் சரிதான்.

தபசில் சொத்தில் தற்போது ஒரு கடை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் இடத்தின் சந்தை மதிப்பு சென்ட் சுமார் 15 லட்சம் இருக்கும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி இடத்தின் சந்தை மதிப்பு குறித்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்பது சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் வாதி நவாஸ்கானை நான் பார்த்தேன், பிரதிவாதியை பார்க்கவில்லை. நவாஸ்கான் எனது நண்பர் என்றால் சரிதான். பிரதிவாதி வாதியின் வங்கி கணக்கிற்கு 5 தவணைகளாக பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நவாஸ்கான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துவந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்திலும் வாதி என்னிடம் பிரதிவாதி தன்னிடம் பணம் கொடுத்த விவரம் எதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் கிரைய ஒப்பந்த ஆவணத்தை படித்துப்பார்த்து சாட்சி கையொப்பமிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி கடனாகத்தான் பணம் வாங்கியிருந்தார் என்றும், அதற்குரிய வட்டித்தொகையை பிரதிவாதி செலுத்திவந்தார் என்றும், அடமான ஆவணம் எழுதி பதிவுசெய்தால் பத்திரசெலவு அதிகமாகும் என்பதற்காக வாதியின் வேண்டுகோளின்படி மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதுவதற்கு முன்னர் மேற்படி சொத்தில் ஒரு சிறிய குடிசை இருந்தது என்றும், அதன் பின்னிட்டு தற்போது கடை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பமிட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தில் தபசிலாக காட்டப்பட்டுள்ளது காலி மனை என்றால் சரிதான். நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,**

**TENKASI.**

**Date : 28.03.2026**

**OS No. : 208/2020**
**Pw : 3**

**Name : திரு. கே. சாகுல் ஹமீது**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 10 வருடங்களாக தென்காசி, செங்கோட்டை தாலுக்காவில் ரியல்எஸ்டேட் புரோக்கராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு தனியாக அலுவலகம் எதுவும் நான் நடத்திவரவில்லை. வாதி நவாஸ்கான் எனது தம்பியாவார். பிரதிவாதி எந்த ஊரில் வசித்துவருகிறார், என்ன வேலை பார்க்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கையொப்பமிட்ட ஆவணத்தை முழுமையாக படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் தபசிலாக காட்டப்பட்டுள்ளது காலி மனை என்றால் சரிதான். தபசில் சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். அது செங்கோட்டை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்தின் கிழமேல் அளவு மற்றும் நான்கு மால் விவரம் எதுவும் எனக்கு நியாபகமில்லை. 2019 ம் வருடம் மேற்படி சொத்தை நான் நேரில் பார்த்தேன். எந்த மாதம் பார்த்தேன் என்பது எனக்கு நியாபகமில்லை. நானும், வா.சா.2 சாகுல் ஹமீது மற்றும் நவாஸ்கான் ஆகியோர் அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தோம். அப்போது அங்கு ஒரு சின்ன வீடு இருந்தது. அந்த வீட்டில் எத்தனை பத்திகள் இருந்தது என்று எனக்கு தெரியாது. அது என்ன வகையான வீடு என்பது எனக்கு தற்போது நியாபகமில்லை. நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்வதால் அந்தந்த

பகுதியில் சந்தை மதிப்பு எனக்கு ஓரளவு தெரியும். நான் அடிக்கடி பத்திரம் போட சார்பதிவாளர் அலுவலகம் செல்வது வழக்கம் என்றால் சரிதான். அதனால் அந்த பகுதிகளின் அரசாங்க வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு ஆகியவை எனக்கு ஓரளவு தெரியும். அந்த காலக்கட்டத்தில் தபசில் சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டி மதிப்பு பற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் தபசில் சொத்தின் மார்க்கெட் மதிப்பு எவ்வளவு என்பதை நானோ வாதியோ விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

கிரைய ஒப்பந்த ஆவணம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் வாதி பிரதிவாதி கிரைய ஆவணம் எழுதிகொடுக்கவில்லை என என்னிடம் குறையாக சொன்னார் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி, வாதியின் வங்கி கணக்கிற்கு Phone pay மூலமாக 5 மாதங்கள் பணம் செலுத்திய விவரம் எனக்கு தெரியாது. வாதி, 1 ம் பிரதிவாதிக்கு பணத்தை கடனாக கொடுத்தார் என்றும், அதற்குரிய வட்டித்தொகையை பிரதிவாதி மாதந்தோறும் வாதிக்கு செலுத்திவிட்டார் என்றும், கிரைய ஒப்பந்த ஆவணமானது தபசில் சொத்தை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அடமான ஆவணம் பதிவுசெய்தால் முத்திரை கட்டணம் கூடுதலாக வரும் என்பதற்காக வாதி சொன்னதன் அடிப்படையில் மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதி பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு பிரதிவாதி மாதந்தோறும் செலுத்திய வட்டி தொகை விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**